# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) SC.218/2023
Sessions)

( Prosecution P.W.1
Deposition of witness for (Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | மணிராஜ் | -- | |
| Father's Name | அழகுரத்திரனம் | Calling | தலைமை காவலர் |
| Village | சுந்தராஜபுரம் | Religion | இந்து |
| Taluk | ராஜபாளையம் | Age | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 20th day of January 2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது சேத்தூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுாிந்து வருகிறேன். இதற்கு முன்பு ராஜபாளையம் தெற்கு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது 24.09.2022ம் தேதி மாலை 06.30 மணிக்கு நான் மற்றும் போலீசார் ராஜபாளையம் தெற்கு காவல் நிலையத்தில் பணியிலிருந்தபோது வான்செய்தி மூலமாக உடனடியாக தெற்கு மற்றும் வடக்கு காவல் நிலைய போலீசார் ராஜபாளையம் பழைய பேருந்து நிலையம் அருகிலுள்ள பாம்பே லாட்ஜ் அருகில் வனவேங்கை கட்சியினர் போரட்டம் நடத்துவதாக தகவல் கிடைத்து நானும், ராஜபாளையம் வடக்கு காவல் நிலைய சார்பு ஆய்வாளர் மூவேந்திரன், சிறப்பு உதவி ஆய்வாளர் மோகன்ராஜ், தலைமை காவலர் மாரி பூபதி மற்றும் தெற்கு காவல் நிலைய முதல்நிலை காவலர் செல்லபாண்டியன், ஆயுதப்படை காவலர் ஆனந்தராஜ் ஆகியோர் மேற்படி இடத்திற்கு சென்றோம். அங்கு சுமார் 70 பேர் கூடியிருந்தார்கள். அவர்களுக்கு அந்த இடத்தில் நிற்பதற்கு காவல் துறையினரால் அனுமதி எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை. அவர்கள் நரிக்குறவர் மற்றும் குருவிக்காரர்கள் வகையை சார்ந்தவர்களை மத்திய அரசு தனித்தனியாக பட்டியல் இனத்தில் சேர்த்திருப்பதுபோல் குறவர் இனத்தையும் தனியாக சேர்க்கவேண்டும் என்று அரசை நோக்கி போராட்டம் செய்தார்கள். அவர்கள் போராட்டம் செய்து வந்ததால் அங்கிருந்து சுமார் 1 கி.மீ தூரத்திற்கு போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. அப்போது அவ்வழியாக ஆம்புலன்ஸ் வந்ததால் போலீசாராக நாங்கள் அவர்களிடம் ஆம்புலன்சிற்கு வழிவிட சொல்லி கேட்டபோது அதில் பாதி பேர் பாதிபேர் மேற்படி ஆம்புலன்ஸை போகச்சொல்லியும் பாதி பேர் ஆம்புலன்ஸை போகவிடாமல் போராட்டம் செய்தார்கள். அப்போது வனவேங்கையை கட்சியை சார்ந்த முத்துபாண்டியன், பேச்சியப்பன், ஈஸ்வரன், சஞ்சீவி ஆகியோர் ஆக்குரோசமாக எங்களை பார்த்து தேவடியா மகனை போன்ற தகாத வார்த்தைகளால் அசிங்கமாக பேசி எங்களுடன் மல்லுக்கட்டு மற்றும் தள்ளுமுள்ளுக்கு வந்தார்கள். அப்போது அந்த கூட்டத்திலிருந்த சுமார் 30 நபர்கள் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். இந்த சம்பவம் பாம்பே லாட்ஜிற்கு சுமார் 100 மீட்டர் வடக்கிலுள்ள என் டி ஆர் சூப்பர் மார்க்கெட் அருகில் வைத்து நடைபெற்றது. அதன் பின்னர் சுமார்

15 நபர்கள்  பாம்பே ேஹாட்டலுக்கு முன்பு வந்து மாலை சுமார் 07.00 மணியளவில் எங்களை பார்த்து போலீஸ்கார நாய்களா நாங்கள் எங்களுடைய கோரக்கைக்காக அரசை நோக்கி போராடுகிறோம். இதில் குறுக்கே வந்தால் போலீஸ்காரர்கள் என்றும் பார்க்காமல் உங்களை வெட்டிவிட்டு ஒரு வாரத்திற்கு ஜெயிலிருந்து வந்துவிடுவோம் என்றார்கள். மீண்டும் அவர்கள் மறியலில் ஈடுபட்டபோது போலீஸாகிய எங்களுக்கும் அவர்களுக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. போலீஸாகிய நாங்கள் சிறிய பலபிரயோகம் செய்து அவர்களை தள்ளி வெளியேறிவிட்டோம். அப்போது பேச்சிமுத்து, ஈஸ்வரன், முத்துப்பாண்டி மற்றும் ஒரு நபர் கற்களுடன் வந்து என்னை நோக்கி எரிந்தார்கள். அதில் எனக்கு இடது தலைபகுதி, வலது கை முட்டி, இடது மார்பு பகுதி ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. நான் வலது மார்பு பகுதியில் சட்டை பையில் வைத்திருந்த என்னுடைய செல்போனிலும் கற்கள்பட்டு எனது செல்போனும் உடைந்துவிட்டது. என்னுடன் இருந்த முதல் நிலை காவலர் செல்லபாண்டியன் என்பவருக்கும் அவர்கள் கல் எரிந்ததால் வலது காது கிழிந்துவிட்டது. அவர்கள் அப்போது மறுபடியும் இப்போது கல்லை விட்டு எரிந்தோம் இனிமேல் அரிவாளால் வெட்டுவதற்கு கூட தயங்கமாட்டோம் என்று கூறினார்கள். அதன் பிறகு காயப்பட்ட என்னையும், செல்லபாண்டியனையும் அவ்வழியாக வந்த ஒரு ஆட்டோவில் ஏற்றி ராஜபாளையம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். போகும்வழியிலேயே எனக்கு மயக்கமாகி விட்டது. நான் ஆட்டோவில் ஏறுவதற்கு முன்பு போராட்டகாரர்களில்  ஒரு நபர் என்னை தலையிலும், உடலிலும் அடித்து இதோடு செத்து தொலை என்று கூறினார். நான் மயக்கமடைந்து சுமார் 15 நிமிடத்தில் சுயநினைவு வந்துவிட்டது. காயப்பட்ட நாங்கள் இருவரும்  மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தோம். நான் சிகிச்சையிலிருந்தபோது வடக்கு காவல் நிலைய ஏட்டையா ஒருவர் என்னிடம் வந்து விசாரித்தபோது நான் ஒரு புகார் மனு கொடுத்தேன். நான் கொடுத்த புகார் மனு **அதசாஆ 1** ஆகும். மேற்படி சம்பவம் பாம்பே லாட்ஜ் அருகே இஞ்சி கடை வைத்திருக்கும் கிறிஸ்டோபர் மற்றும் பீடா கடை வைத்திருக்கும் சிவராமன் ஆகியோர்களுக்கு தெரியும். எதிரிகள் எங்களை தாக்கிய கற்களை பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் 7 கற்கள்தான் அவர்கள் பயன்படுத்தியதாகும். அவைகள் **சாபொ1** வரிசை ஆகும். இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

போராட்டம் நடத்துவது குறித்து வான்செய்தி மூலமாக தகவல் கிடைத்தது. அதற்கு முன்பு போராட்டம் நடத்தபோவது குறித்து எனக்கு தெரியாது. எனக்கு தகவல் 05.45 மணிக்கு கிடைத்தது. நான் சம்பவ இடத்திற்கு போகும்போது போராட்டக்காரர்கள் வந்துவிட்டார்கள். என் டி ஆர் சூப்பர் மார்க்கெட் பழைய பேருந்து நிறுத்தத்திலிருந்து 50 மீ தொலைவில் உள்ளது. என் டி ஆர் சூப்பர் மார்க்கெட்டிலிருந்து காந்தி சிலை 100 மீ தொலைவில் இருக்கும்.  போராட்டம் நடந்த இடத்திற்கு எதிர்புறம் அரசு மருத்துவமனை உள்ளது. அது ராஜபாளையத்தின் மையப்பகுதி என்பதால் எப்போதும் மக்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும். அந்த இடத்தில் கடைகள், பேருந்து நிறுத்தம், ேஹாட்டல் ஆகியவை இருக்கும்.  அரசு மருத்துவமனையில் சம்பவ சமயத்தில் காவலர்கள் இல்லை. போக்குவரத்து போலீசார் மட்டும் இருந்தார்கள். சம்பவயிடத்திற்கு போராட்டக்காரர்கள் வருவது குறித்து போக்குவரத்து போலீசார்  எங்களுக்கு தெரிவிக்கவில்லை. அங்குள்ள கடைகள் மற்றும் ஷாப்பிங் மாலில் கேமராக்கள் உள்ளன. நான் தற்போது சொல்வதுபோல்தான் புகார் வாக்குமூலத்திலும் போலீசார்

விசாரணையிலும் சொன்னேன். போராட்டக்காரர்கள் எப்படி வந்தார்கள் என்றால் அவர்கள் வந்த பிறகுதான் பார்த்தேன். நான் பார்க்கும்போது போராட்டக்காரர்கள் பதாகையோ, கொடியோ வைத்திருக்கவில்லை. அவர்கள் வெறும் கையுடன் நின்றுக்கொண்டிருந்தார்கள். சம்பவம் நடந்த இடம் தார் ரோடு ஆகும். சம்பவ இடத்தை சுற்றி கட்டுமான வேலை எதுவும் நடக்கவில்லை. சம்பவத்திற்கு முதல்நாள் இதே கோரிக்கையோடு இந்த இன மக்கள் தமிழ்நாடு முழுவதும் போராட்டம் செய்தார்கள் என்றால் சரிதான். போராட்டத்தில் பல்வேறு மாவட்டத்தை சேர்ந்தவர்கள் ஈடுபட்டர்களா என்றால் எனக்கு தெரியாது. போராட்டத்திற்கு முன்பு 10 நாட்களாக மனையடிபட்டி – சத்திரப்பட்டி ரோட்டில் உண்ணாவிரதம் நடைபெற்று வந்தது என்றால் சரிதான். பந்தல்கள் அமைத்து அமைதியான முறையில் உண்ணாவிரதம் நடைபெற்றது. அந்த உண்ணாவிரதத்தில் கலந்துக்கொண்ட நபர்களின் விவரம் எனக்கு தெரியாது. உண்ணாவிரதத்தில் சுமார் 150 நபர்கள் இருந்திருப்பார்கள் என்றால் எனக்கு தெரியாது. அந்த 10 நாட்களும் எங்கள் நிலையத்திலிருந்து இரண்டு காவலர்கள் பாதுகாப்பிற்கு சென்றார்கள் என்றால் எனக்கு தெரியாது. அந்த 150 நபர்களும் ஜெகஸ்தியர் மஹாலில் வைக்கப்பட்டிருந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவத்தன்று காலையில் அதே மண்டபத்தில் அவர்கள் உள்ளிருப்பு போராட்டம் நடத்தினார்கள் என்றால் எனக்கு தெரியாது. அப்போது காவலர்கள் அவர்களை வெளியே போகச்சொன்னார்கள் என்றால் எனக்கு தெரியாது. நாங்கள் எந்தெந்த நேரத்தில் என்னென்ன பணி செய்தோம் என்று காட்டுவதற்கு நோட் புக் வைத்திருப்போம். அதை பார்த்தால் நான் சம்பவயிடத்தில் பணி செய்தேனா என்று தெரியவரும் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னதுபோல எந்தவித போராட்டமும் நடக்கவில்லை என்றும் போராட்டக்காரர்கள் குறித்து எந்த விபரமும் எனக்கு தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. போராட்டக்காரர்கள் குறித்து 6 நாட்கள் கழித்து விசாரணை செய்தேன். இந்த வழக்கில் புகார் மனுவை நான்தான் எழுதினேன். வழக்கமாக நான் தமிழிலும் ஆங்கிலத்திலும் கையெழுத்து போடுவேன். நான் மருத்துவமனைக்கு வந்து 2 மணி நேரத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் அசாஆ 1 புகார்தான் நான் கொடுத்தது. நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் எந்த காயமும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிகளுக்கும் எந்தவித சம்பந்தமுமில்லை என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 20th day of January 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**